சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண். 125/2021

18.09.2025

பி.வா.சா.1 திரு. குருமூர்த்தி, த/பெ. இரத்தினம்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது பூர்வீக ஊர் கொரடாச்சேரிக்கு அருகேயுள்ள பத்தூராகும். எனது தகப்பனாருடன் பிறந்தவர் சீனிவாசன் என்பவர் மட்டுமே ஆவார். என் தாயார் பெயர் அம்சம்மாள். எனது தாயாருக்கு நான் மட்டுமே வாரிசு. வாதி ராஜேந்திரன் எனது தாயாரின் தம்பி ஆவார். எனது தாயாருக்கு பூர்வீகம் திருவிடைவாசல் ஆகும். வாதி ராஜேந்திரனின் தாயார் பெயர் பட்டம்மாள். இளஞ்சியத்தம்மாள் என்பவர் என் தாயாரின் சின்னம்மா ஆவார். திருவிடைவாசல் கிராமம் பழைய புல எண் 13/24 புதிய புல எண்கள் 104/7, 104/8 கூடுதல் 10 செண்ட் இடமானது இளஞ்சியத்தமாளுக்கு திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் அ.வ.எண்.158/1946 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பால் கிடைக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். இளஞ்சியத்தம்மாளின் சகோதரி தான் பட்டம்மாள் என்றால் சரிதான். இளஞ்சியத்தம்மாள் அவருக்கு கிடைத்த சொத்தை பட்டம்மாளுக்கு 06.08.1950 ல் செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணத்தில் கல்கட்டுக்கோப்பு உட்பட என்று எழுதப்பட்டுள்ளது என்றால் தவறாக எழுதப்பட்டுவிட்டது. பட்டம்மாள் 20.02.1991 ல் அவருக்கு கிடைத்த சொத்தை பொறுத்து வாதி பெயருக்கு உயில் ஒன்று எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. உயில் எழுதிவைத்த விவரம் எனக்கு இதுநாள் வரை தெரியாது. பட்டம்மாள் எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் இறந்தது உண்மை. பட்டம்மாள் 1991 டிசம்பரில் இறந்த பின்னிட்டு உயில் அமலுக்கு வந்தது என்றால் சரியல்ல. பட்டம்மாளை நான் தான் இறக்கும் வரை பார்த்துக்கொண்டேன் என்றால் சரிதான். எனவே உயில் எழுதிவைத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. வாதி ராஜேந்திரன் காவல்துறையில் எப்போது வேலைக்கு சேர்ந்தார் என்று எனக்கு தெரியாது. வாதி திருநெல்வேலியில் வேலை பார்த்த விவரம் தெரியாது. வாதி நாகப்பட்டிணம் மாவட்டத்தில் வேலை பார்த்த விவரம் எனக்கு தெரியாது. வாதி வெளியூர் சென்று வேலை பார்த்து வந்ததால் தாவா சொத்தில் ஒரு

பகுதியில் என்னை குடியிருக்க அனுமதித்தார் என்றால் இல்லை. தாவா சொத்திலுள்ள வீடு ஒரே வீடு என்றால் சரிதான். வீட்டின் நீள, அகலம் எனக்கு தெரியாது. வீட்டின் மொத்த விஸ்தீரணம் தெரியாது எனக்கு உண்டானது மட்டும் தெரியும். தாவா சொத்திற்கு 1946 ஆம் வருடம் ஜூலை மாதம் வந்தேன். நாங்கள் வீட்டிற்கு குடிவந்த போது நான் 6 மாதக்குழந்தையாக இருந்தேன். மேற்சொன்ன விவரத்தை முதல்விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

**வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.